நாள் : 20-10-2009

**அரியலூர் மாவட்டத்தில் 2009-10 ஆம் ஆண்டுக்கான அனைத்து கிராம அண்ண மறு மலர்ச்சி திட்டம் குறித்த மாவட்ட கையேட்டினை மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு.இராசா அவர்கள் வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப, அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.**

அரியலூர் மாவட்டம் செந்துறை ஊராட்சி ஒன்றியம் துளார் ஊராட்சியில் 19.10.09 மாலை 5 மணிக்கு நடைபெற்ற ஆணைவாரி ஓடையின் குறுக்கே கட்டப்பட்ட உயர் மட்ட பாலம் திறப்பு விழாவின்போது 2009-10 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்ட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் குறித்த மாவட்ட அளவிலன புத்தகம் மாண்புமிகு மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு.இராசா பி.எஸ்.சி, எம்.எல். அவர்களால் வெளியிட அதனை அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப, அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 2009-10 ஆம் ஆண்டு அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 8 கிராம ஊராட்சிகளில் 96 பணிகள் 160 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 8 கிராம ஊராட்சிகளில் 120 பணிகள் 160 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் 7 கிராம ஊராட்சிகளில் 96 பணிகள் 140 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் 6 கிராம ஊராட்சிகளில் 78 பணிகள் 120 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 6 கிராம ஊராட்சிகளில் 68 பணிகள் 120 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் 6 கிராம ஊராட்சிகளில் 89 பணிகள் 120 லட்ச ருபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆக 41 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு 547 பணிகள் ரூபாய் 820 லட்சத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஏன மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர், திட்ட அலுவலர் திரு.வெங்கடாசலம், செந்துறை ஒன்றியக்குழுத்தலைவர் செல்வி செங்குட்டுவன், மாவட்ட தொலைபேசி ஆலோசனை குழு உறுப்பினர் மு.ஞானமூர்த்தி ஆகியயோர் கலந்து கொண்டனர்.

செ.ம.தொ.அ